நத்தார் பண்டிகையை
முன்னிட்டு
விளையாட்டு பொம்மை
பொருள்கள், பிஸ்கட்,
சொக்கலட் வகைகள்,
பழ வற்றல்கள்.
குளிர்பான தயாரிப்புகள்
கணேஷா
வர்த்தக நிலையம்
65, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கிறிஸ்தவ பெருமக்களுக்கு
சகல கேக் வகை
தயாரிப்பு பொருள்களும்
நத்தார் பண்டிகையை
முன்னிட்டு
மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள
நாடுங்கள்:
கணேஷா
வர்த்தக நிலையம்
65, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 29 செவ்வாய்க்கிழமை (14 - 12 - 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 18

# அரசு பெரும்தாக்குதலுக்கு தயாராவதால்
# சமாதானம், பேச்சு எதற்குமே இடமில்லை

## வடமராட்சியில் நடைபெற்ற வெற்றி விழாவில் கரிகாலன்

வடமராட்சி, டிசம்பர் 14

புத்தாண்டில் மிகப் பெரும் தாக்குதலை நடத்துவதற்கு அரசாங்கம் —இராணுவம்— தயாராகி வருகிறது; இந்நிலையில் அரசு புலிகளுடன் பேச்சு நடத்தும், சமாதானம் ஏற்படும் என்பதை நாம் கனவிலும் நினைக்க முடியாது; அதே போன்று இராணுவம் ஒரு மிகப் பெரும் தாக்குதலை நடத்திக் கொண்டிருக்கும் போது நாமும் பேச்சுக்குச் செல்ல முடியாது; ஆகையால் சமாதானம், பேச்சுவார்த்தை எதற்கும் இடமே இல்லை;

பருத்தித்துறையில் நேற்று நடைபெற்ற பூநகரி வெற்றி விழாக் கூட்டத்தில் பேசிய தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் இவ்வாறு தெரிவித்தார்.

வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. செல்வன் தலைமையில் நடைபெற்ற வெற்றி விழாக் கூட்டத்தில் பேசுகையில் திரு. கரிகாலன் மேலும் தெரிவித்ததாவது:-

பெரும் தோல்விகளை படையினர் சந்தித்துவரும் வேளையில் அரசு எந்தவித பேச்சு வார்த்தையிலும் ஈடுபடமாட்டாது. என்பதை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இராணுவம் யுத்தத்துக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் நேரத்திலே எந்தவித சாமாதான முயற்சிகளும் எடுபடமாட்டாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்நிலையில் அரசு புலிகளுடன் பேச்சு நடத்தும் சாமாதானம் ஏற்படும் என்பதை நாம் கனவிலும் நினைக்க முடியாது அதேபோன்று இராணுவம் ஒரு மிகப் பெரும் தாக்குதலை நடத்திக் கொண்டிருக்கும் போது நாமும் பேச்சுக்குச் செல்ல முடியாது.

எனவே பேச்சுவார்த்தையோ, சமாதானமோ இங்கு ஏற்படும என நாம் நம்ப முடியாது. இராணுவத் தீர்வுதான் ஒரே வழி என அரசு முயல்கின்றபோது நாமும் இராணுவத் தீர்வை எதிர்கொள்ள வேண்டிய ஓர் கட்டாய சூழ்நிலையில் இருக்கிறோம். இராணுவம் மேல் நிலையில் இருக்கின்றபோது நாமும் அந்த நிலையை அடையவேண்டும். இராணுவம் தன்னைப் பலப்படுத்தும் போது நாமும் எம்மைப் பலப்படுத்தவேண்டும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## போராளி வீரச்சாவு

யாழ்ப்பாணம், டிச. 14

முல்லைத்தீவுப் பகுதியில் கடந்த சனிக்கிழமை காலை இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிக் கடலில் படையினர் பீரங்கித் தாக்கு

வல்வெட்டித்துறை, டிச. 14

வடமராட்சிக் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது நேற்றுக் காலை 6-30 மணியளவில் கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

தொண்டமானாறு மயிலியதனை, ஆதிகோவிலடி, வல்வை, பொலிகண்டி ஆகிய கடற்பகுதிகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீதே தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இத்தாக்குதல்களால் மீன்பிடிப் படகுகளும் உபகரணங்களும் சேதமடைந்தன.

இதேவேளை —

காலை 8-10 மணியளவில் படையினர் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர் என்றும் —

இதனால் கரையோரப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் ஜி. சி. ஈ. பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் மத்தியில் பதற்றம் நிலவியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கைப்பற்றப்பட்ட படகு ஓடிக் காண்பிக்கப் பட்டது

யாழ்ப்பாணம், டிச. 14

பூநகரி வெற்றிவிழா மூன்றாம் நாள் நிகழ்வுகள் நேற்றைய தினம் குடா நாடெங்கும் வெகு சிறப்பாக நடைபெற்றன. ஆங்காங்கே சிறப்பு நிகழ்ச்சிகள் பலவும் நடைபெற்றன. எல்லாப் பகுதிகளிலும் ஒலிபெருக்கிகளில் எழுச்சி கீதங்கள் ஒலித்த வண்ணம் இருந்தன.

பூநகரித் தாக்குதலின் போது, கைப்பற்றப்பட்ட நீருந்து விசைப்படகுகளில் ஒன்று மக்களுக்கு ஓடிக் காண்பிக்கப்பட்டது. வலிகாமத்தில் உள்ள கடல் நீரேரிப் பகுதி ஒன்றில் நேற்று நண்பகலில் விசைப்படகு ஓடிக் காண்பிக்கப்பட்டது. அதனை பெரும் எண்ணிக்கையான மக்கள் திரண்டு சென்று பார்வையிட்டனர்.

நேற்று மாலையில் யாழ். நகரப் பகுதி உட்படப் பல இடங்களில் வெளிச்சக் கூண்டுகள் விடப்பட்டன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் 10 தமிழர் படையினரால் கைது

யாழ்ப்பாணம், டிச. 14

கடந்த 5 ஆம் திகதி திருகோணமலை மாவட்டத்தின் பூநகர், பூமரத்தடி ஆகிய கிராமங்களை சுற்றி வளைத்த இராணுவத்தினர் 7 அப்பாவித் தமிழ் மக்களை கைது செய்தனர்.

சுப்பிரமணியம் மகேந்திரன் (வயது 25), தம்பிராசா சபாரத்தினம் (வயது 25), ரட்ணசிங்கம் மனோரஞ்சிதம் (வயது 27), பாக்கியராசா அன்னக்கிளி (வயது 30), மகாலிங்கம் செம்பாத்தை (வயது 28), ரவீந்திரன் (வயது 24), தெய்வேந்திரராசா அழகுராசா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய ஆளுநர் லயனல் யாழ். வர விருப்பம்

யாழ்ப்பாணம், டிச. 14

வடக்கு — கிழக்கு மாகாண சபையின் புதிய ஆளுநர் திரு. லயனல் பெர்னாண்டோ அடுத்த மாத முற்பகுதியில் யாழ்ப்பாணம் வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை நிலையை நேரில் பார்ப்பதற்கும் —

அவர்களின் கஷ்டங்களை நேரில் கேட்டறிவதற்கும் —

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள சேதங்களைப் பார்ப்பதற்கும் —

திரு. லயனல் பெர்னான்டோ விரும்புவதாகவும், அதனால் அவர் மிக விரைவில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வார் என்றும் கொழும்புத் தகவல்கள் மூலம் தெரிய வந்துள்ளது. (அ-3)

### கிளாலிப் படுகொலைகளை அறிந்து
# தலைவர் மனதில் உண்டான வடு
# பூநகரியில் வெற்றியாக விளைந்தது

### கடற்புலிகள் சிறப்புத் தளபதி சூசை

யாழ்ப்பாணம், டிச. 14

கிளாலி கடலேரியில் 300 க்கு மேற்பட்ட அப்பாவி பொது மக்கள், வெட்டியும், கொளுத்தியும், இயற்கையின் சீற்றத்தாலும் கொல்லப்பட்டனர். இந்த சம்பவங்கள் ஒவ்வொன்றும் எங்கள் தலைவரின் மனதில் வடுக்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

எங்கள் மக்கள் எவ்வளவு பேர் வெட்டிக் கொல்லப்பட்டார்களோ அதனைவிட அதிகமானோர் —

இந்தச் சம்பவங்களுக்கு காரணமானோர் —

அதே கடலேரியில் மிதக்கவிடப்பட வேண்டும் எனத் தலைவர் நினைத்தார். அதன் விளைவே இங்கு வெற்றி நாளாகக் கொண்டாடப்படுகிறது.

இவ்வாறு நேற்று பருத்தித்துறையில் நடைபெற்ற பூநகரி வெற்றி நாள் கூட்டத்தில் உரையாற்றிய கடற் புலிகளின் சிறப்புத் தளபதி சூசை தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;-

பூநகரியில் இப் பொழுதும் கடற்படையினரின் சடலங்கள் மிதக்கின்றன. பூநகரித் தாக்குதலில் வீரகாவியம் படைத்த கடற்கரும்புலி கணேஷ் சென்ற படகின் இயந்திரத்தை நேற்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



நொண்டிக் குதிரைக்கு சறுக்கினது சாட்டு பாருங்கோ...!

## இரவில் வாகனங்களில் செல்ல அஞ்சும் தமிழர்

யாழ்ப்பாணம், டிச. 14

கொழும்பில் இரவு நேரங்களில் வாகனங்களில் செல்வதற்கு தமிழர்கள் அஞ்சுகின்றனர்.

இரவு நேரங்களில் டாக்சி, ஓட்டோ மற்றும் மினிபஸ்களில் செல்லும் தமிழர்கள் படையினரின் சோதனைக்கு உள்ளாவதுடன் தேவையற்ற சிரமங்களையும் எதிர்நோக்குகின்றனர்.

இந்த சிரமங்களைத் தவிர்க்கவே தமிழ்மக்கள் நெடுந்தூரமானாலும் நடந்தே செல்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை — கொழும்பில் தமிழர் கைது செய்யப்படுவது தொடர்வதாகவும் —

இவை பெரும்பாலும் பணம் பறிப்பதற்காக நடப்பதாகவும் — தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## இறுதி நாள் நிகழ்வை முன்னிட்டு பருத்தித்துறை விழாக்கோலம்

### கிராமக் கோட்டுச் சந்தியிலிருந்து அணிவகுப்பு - பேரணி

வடமராட்சி, டிச. 14

பூநகரி வெற்றி விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று இராணுவ அணிநடை, பாண்ட் அணிநடை, அலங்கார ஊர்தி, கரகாட்டம் ஆகியவற்றுடன் பருத்தித்துறையில் நடைபெற்றன.

நேற்று பிற்பகல் 4 மணியளவில் பருத்தித்துறை கிராமக் கோட்டுச் சந்தியிலிருந்து அணிவகுப்பு ஆரம்பமாகியது.

கிராமக் கோட்டுச் சந்தியிலிருந்து பருத்தித்துறை பழைய பஸ் நிலையம் வரை சிவப்பு, மஞ்சள் கொடிகளாலும் சவுக்கு மரங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

இடையிடையே அலங்காரக் கூடுகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

பருத்தித்துறைச் சாலை தமிழ் பேசும் போக்குவரத்து ஊழியர் சங்கம் பருத்தித்துறை தேநீர்கடை உரிமையாளர்கள் ஊர்வலப் பாதையிலும் கூட்ட மைதானத்தடியிலும் தாக சாந்திகளை ஏற்பாடு செய்திருந்தனர்.

அணிவகுப்பு ஊர்திப் பவனிகளுக்குப் பின்னால் பொது மக்கள் பேரணியாக கூட்ட மைதானத்தை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

கூட்ட மைதானத்தை அணிவகுப்பு, ஊர்திப் பவனி பேரணி வந்து சேர்ந்ததும் வடமராட்சி சிறப்புப் பொறுப்பாளர் திரு ரவி தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கார்ட்டுக்கு 2 லீற்றர் மண்ணெண்ணெய்

யாழ்ப்பாணம், டிச. 14

'மார்கோ' கப்பலில் எடுத்து வரப்பட்ட மண்எண்ணெய் ஒரு குடும்பத்துக்கு 2 லீற்றர் வீதம் விற்பனை செய்யப்படவிருக்கின்றது.

இக்கப்பலில் இருந்து மண்எண்ணெய் இறக்கும் வேலைகள் ஓரிரு தினங்களில் பருத்தித்துறையில் ஆரம்பிக்கப்பட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## களத்தில் இருந்த தளபதிகள் என் உத்தரவுக்கு பணியவில்லை

### பூநகரித் தோல்வி குறித்து சிசில் வைத்தியரத்னா

கொழும்பு, டிச. 14

இம்மாதம் 31 ஆம் திகதியுடன் பதவியில் இருந்து ஓய்வு பெறும் ஸ்ரீலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்னா நேற்று வெளியான ஐலண்ட் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், பூநகரித் தோல்விக்கு தாமே முழுப்பொறுப்பு என்று ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஆனால் களத்தில் இருந்த தளபதிகள் தமது கட்டளையை நிறைவேற்ற வில்லை என்றும் தமது கட்டளையின் படி அவர்கள் நடக்கவில்லை என்றும் சிசில் வைத்தியரத்னா குற்றஞ்சாட்டி உள்ளார்.

கொழும்பில் உள்ள தனது செய்தியாளரை மேற்கோள் காட்டி பி. பி. ஸி முன்கண்டவாறு தெரிவித்தது.

புதிதாக தளபதி பதவியை ஏற்கவிருக்கும் ஜெரிடி சில்வாவுக்கு அரசு பதவி உயர்வு வழங்கியதையும் சிசில் வைத்தியரத்னா பலமாகக் கண்டித்துள்ளார் என ஐலண்ட் பத்திரிகையில் வெளிவந்த அவரின் பேட்டியை ஆதாரம் காட்டி பி. பி. ஸி மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுத்தள மாதிரியை பார்க்க நேற்றும் பெரும் மக்கள் கூட்டம்

வல்வெட்டித்துறை, டிச. 14

வடமராட்சியில் அமைக்கப்பட்டுள்ள பூநகரி கூட்டுத்தள மாதிரி அமைப்பினைப் பார்ப்பதற்காக, வெற்றி விழாவின் மூன்றாம் நாளான நேற்று, குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் ஆயிரக் கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது பெண்கள், சிறுவர்கள் உட்பட பல தரப்பினரும் மாதிரி அமைப்பைப் பார்வையிட்டனர்.

மாதிரி அமைப்பு அமைந்திருக்கும் பகுதிக்கு ஆயிரக் கணக்கான சைக்கிள்களில் பெரியவர்களும், இளைஞர்களும் சாரிசாரியாகச் சென்று கொண்டிருந்தனர்.

பூநகரி கூட்டுப் படைத்தளத்தை நேரில் சென்று பார்த்தது போன்ற உணர்வு ஏற்பட்டதாக பொது மக்களில் பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

மிகத் தத்ரூபமாகச் சித்திரிக்கப்பட்டிருந்த பூநகரிச் சமர்க் காட்சிகளை மக்கள் வைத்த கண் வாங்காது பார்த்துப் பிரமித்தனர்.

பலர் குடும்பமாக வந்து மாதிரி அமைப்பைப் பார்வையிட்டனர். குழந்தைகள் சிலர் நீண்ட நேரமாக காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்ததையும், ஓர் இடத்திலிருந்து வேறு இடத்திற்கு அவர்களைக் [illegible] வதற்கு பெற்றோர்கள் சிரமப்பட்டதையும் காணமுடிந்தது. (அ-153-111)

## தேசியத் தலைவருக்கு வெற்றிக்கிரீடம்

பூநகரி கூட்டு இராணுவத் தளம் மீதான தாக்குதலை சிறப்புறத் திட்டமிட்டு, நெறிப்படுத்தி, வெற்றி ஈட்டியமைக்காக தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு வெற்றிக் கிரீடமும், வெற்றிக் கேடயமும் வழங்கப்பட்டன.

பூநகரி வெற்றி நாளின் இரண்டாம் நாள் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற போதே இவை வழங்கப்பட்டன.

வெற்றிக் கேடயத்தை வலி. மேற்கு வர்த்தகர் [illegible] கிரீடத்தை சங்கானை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சமூகசேவை அலுவலகம் முன் இன்று மறியற் போராட்டம்

### கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச. 14

யாழ். மாவட்டத்தில் உள்ள 22 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், இணைந்து, யாழ். செயலக சமூகசேவை அலுவலகம் முன் இன்று காலை 8 மணி முதல் மறியல் போராட்டத்தில் ஈடுபடுவர் என்று அறிவிக்கப்படுகின்றது.

பொதுமக்கள் பாதிப்படையாமல் இருக்க கூட்டுறவுப் பணியாளர்கள் இப் போராட்டத்தில் ஈடுபடமாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு செலுத்த வேண்டிய பல இலட்சம் ரூபா பணம் தொடர்பாக யாழ். சமூக சேவைப் பகுதி மாற்று ஏற்பாடாக கடன் திட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து தர வேண்டும் என்றும் —

தவறினால் மறியல் போராட்டம் நடத்துவது என்றும்—கடந்த 9 ஆம் திகதி யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும், கூட்டுறவுச் சபையும் எடுத்த முயற்சிகள் பணத்தைப் பெறுவதில் எதுவித வெற்றியும் அளிக்காததால் யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்கங்கள் வேறு வழியின்றி நேரடி நடவடிக்கையில் இறங்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-162-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

பக்கம் கட்டும் அனுபவமுள்ள அச்சுக் கோர்ப்பாளர் (ஆண்) தேவை. தகுதியுள்ளவர்கள் நேரில் வரவும். சோதி அச்சகம் (மக்கள் கடைக்கு அருகில்) கச்சாய்வீதி, சாவகச்சேரி. (சி-6695)

### மணமகன் தேவை

இந்து, 7இல் செவ்வாய், திருவாதிரை, வயது 31, கௌரவமான உத்தியோகம் பார்க்கும் அழகிய பெண்ணுக்கு ஆசிரியர், அரச, வங்கி உத்தியோகம் வகிப்பவர் விரும்பத்தக்கது. வீடு, வயல், பணம் உண்டு. தகுதிக்கேற்ப சீதனம் வழங்கப்படும். தொடர்பு: S. ரங்கநாதஐயர், நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. (28353)

### ENGLISH

வங்கிப் பரீட்சைக்கும் ஆங்கிலத்துடன் கற்பிக்கப்படுகிறது. ஆரம்பம்: 15-12-93 காலை, V.N. Kandasamy.Sat. B. A. (Peradeniya) B.A.Public Administration (Vidyodya) B.Sc. (Ecom.) (London) A.I.B. Final (London) Dip-in-Eng. Phd. Researcher. Consultant (English Studies) 87. திருநெல்வேலி றோட், (றயில் கடவைக்குச் சமீபமாக) கொக்குவில். (6850)

### கலண்டர், டயறி வகைகள்

லீலா கலண்டர் சகல விதமான டயறிவகைகள், கிறிஸ்மஸ் கார்ட், அன்பளிப்பு அடிப்பதற்குரிய கலண்டர் மொத்தமாகவும் சில்லறையாகவும் மக்மிலன், ஸ்ரீகாந் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம் (சி/6698)

### இந்தியாருடே

இலங்கை ஏஜண்டான P. S. சுந்தரம் அன் சன்ஸ் அவர்கள் தமிழீழத்தில் ஏஜண்டாக எம்மை நியமித்துள்ளார்கள். வாடிக்கையாளரின் நன்மை கருதி விலை குறைத்துள்ளோம். மக்மிலன், ஸ்ரீகாந் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (சி-6696)

### மகாதேவா ஜோதிடம்

1994 வருஷப்பலன் விற்பனையாகிறது. ஜோதிடரை தினசரி 140, செல்லர் வீதி, நல்லூரில் சந்திக்கலாம். (28424)

### யாருடையது?

சுன்னாகம் வீதியில் கங்கத்தினாலான பொருள் ஒன்றை கண்டெடுத்துள்ளேன். உரியவர் தகுந்த ஆதாரத்தினைக் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். செல்வன் க. யோகலிங்கம், பூதர்வளவு, அச்செழு, நீர்வேலி. (28425)

### வீதி விளக்குகள்

பருத்தித்துறை நகர சபைப் பிரதேசத்தில் வீதி விளக்கு அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

முதல் கட்டமாக நகரின் முக்கிய இடங்களில் விளக்குகள் அமைக்க ஏற்பாடாகியுள்ளது. (ஓ-173)



## G. A. Q. - 95

## பேராதனை

★ கலை, விஞ்ஞானம், வர்த்தகம் எத்துறையிலாயினும் A/L இல் மூன்று பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

★ இதற்கான பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

இதற்கான விரிவுரைகள்
**11 - 12 - 93 இல்**
ஆரம்பமாகிவிட்டன.

★ விவரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும், நேர அட்டவணையையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

விவரங்களுக்கு:

S. அருள்நந்தகை

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம்.

(சி-6599)



## A/L 93

பகல் நேரம்

**(DAY CLASSES)**

சனி - ஞாயிறு
(SAT. - SUN.)

மீட்டல் வகுப்பு

ஆரம்பம்:
**14-12-1993**
(8 மணி)

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்
(சி-6801)



வடமராட்சியில்
இங்கு மட்டுமே!

## A/L 93இல்

பரீட்சை எடுத்த
மாணவருக்கான

**DAY CLASS**

ஆரம்பம்:
**14 - 12 - 1993**
செவ்வாய் 12மணி

பொருளியல் —
க. கலாகரன்
மா. லோகசிங்கம்

கணக்கியல் —
S. K. பிரபாகரன்

அளவையியல் —
விக்கி

வர்த்தகம் —
இரட்ணம்
பரதன்

இந்துநாகரிகம் —
ஜோதீஸ்வரன்

தமிழ் —
அமரசிவம்

## MATHS CENTRE

நெல்லியடி
M. M. V. வீதி.
நெல்லியடி.
(சி-6597)



## COMPUTER கல்வி

**DIPLOMA IN COMPUTER PROGRAMMING BASIC LANGUAGE**
4 MONTHS

சனி, ஞாயிறு வகுப்புகள்
ஆரம்பம்: 18 - 12 - 1993
2-00 மணி

**LOTUS 1 - 2 - 3**
2 MONTHS

செவ்வாய், வியாழன் வகுப்புகள்
ஆரம்பம்: 21 - 12 - 1993
8-30 மணி

**C. I. M. A., I. A. B., SHORT-HAND & TYPING**

புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.

உறுதியான கல்வியைப் பெற

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(PIONEERS IN COMPUTER EDUCATION)
16, 3RD. CROSS STREET, JAFFNA.
[சி-6704]



## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

பண்டத்தரிப்புக் கோட்டம்

## விசேட பொதுக்கூட்டம்

இடம்: சங்கானை சிவப்பிரகாச மகா-வித்தியாலயம்
காலம்: 15 — 12 — 1993 (புதன் கிழமை)
நேரம்: 3-30 மணி

புதிய நடைமுறைகள் பற்றிய விளக்கமளிக்கப் படவுள்ளதால், நிறுவன இயக்குநர்கள், பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்கள், கல்வி கற்பிக்கும் ஏனைய ஆசியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

— செயலாளர்.

[6851]



# BECON

யாழ்ப்பாணம்.

## A/L 94 DAY CLASSES

கலை, வர்த்தகம்

**புதிய பிரிவு**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | S வரதராஜன் |
| வர்த்தகம் | — | பசில் |
| கணக்கியல் | — | சௌந்தி |
| அளவையியல் | — | மனோகரன் |

ஆரம்பம்: 14 - 12 - 1993
செவ்வாய் 8-00 a. m.

★ நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
★ முன் கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

[சி-6702]


# போஷாக்கு குறைவினால் ஈழ அகதிகள் பாதிப்பு

## பிரிட்டிஷ் வைத்திய அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், டிச. 14

தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழ் அகதிகள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாக பிரிட்டிஷ் வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தமிழ் நாட்டிற்குச் சென்ற அந்த வைத்திய அதிகாரி அங்குள்ள ஈழத் தமிழ் அகதிகளை சென்று பார்வையிட்டு விவரங்களைச் சேகரித்தார்.

அவர் வழங்கிய தகவல்களின்படி 5 வயதுக்கும் 7வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்கள் போசாக்கின்மையால் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. அவர்களது உள நிலையும் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஓ 5)

## சித்த ஆயுள்வேத வைத்தியசாலை

வடமராட்சி, டிச. 14

நாகர்கோவில் பகுதியில் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபை குடத்தனை உபஅலுவலகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வைத்தியசாலையில் பிரதி சனிக்கிழமை தோறும் சிகிச்சை அளிக்கப்படும். (ஓ-173)

# இளம்தலைமுறை பலிக்கடா ஆவதை பரிசீலிக்க வேண்டும்

## வடக்கு - கிழக்கு ஆளுநர் கருத்து

கொழும்பு, டிச. 14

கடந்த 40 ஆண்டுகளாக இளம் தலைமுறையினர் பலிக்கடா ஆக்கப்பட்டுள்ளனர். இது தொடர்வது நல்லதா என்பதை நாம் பரிசீலிக்க வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் புதிய ஆளுநர் திரு. லயனல் பெர்னாண்டோ பி. பி. சிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறியுள்ளார்.

''சமாதானம் அனைவருக்கும் அவசியமானது. எங்கள் இளம் தலைமுறையினர் தமிழராயினும் சிங்களவராயினும் எதிர்காலம் அற்ற நிலையில் தற்போது அழிந்த வண்ணம் உள்ளனர் என்றும் அவர் கூறினார். (ஓ-க-6)

# ஆர். ஆர். தர்மரத்தினம் நினைவாக புலமைப் பரிசில்

யாழ்ப்பாணம், டிச 14

லங்கா சமசமாஜக் கட்சியின் முன்னாள் வடபிராந்தியச் செயலாளரும் உடுப்பிட்டி கிராம சபையின் நீண்டகாலத் தலைவருமான காலஞ்சென்ற ஆர். ஆர். தர்மரத்தினம் ஞாபகார்த்த புலமைப் பரிசில் திட்டத்திற்கான நிதியம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி நூலகத்தில் இளைப்பாறிய அதிபர் திரு. எஸ். ஆர். அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற அமரர் ஆர். ஆர். தர்மரத்தினத்தின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தில் இந் நிதியம் உருவாக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தில் வருடா வருடம் விவசாயத் துறையில் விஞ்ஞான பட்டதாரி பரீட்சையில் முதலாவதாகச் சித்தியடையும் மாணவனுக்கு வழங்கக் கூடியதாக அமரர் ஆர். ஆர். தர்மரத்தினத்தின் நண்பர்கள் அவரின் சேவையை பாராட்டி இந்நிதியத்தை உருவாக்கியுள்ளனர். (இ162)

## மலேரியாவினால் அநேகர் பாதிப்பு

தென்மராட்சி, டிச. 14

தென்மராட்சிப் பகுதியில் மலேரியாக் காய்ச்சலினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தினமும் நூற்றுக்கணக்கானோர் காய்சலினால் பாதிக்கப்பட்டு இப்பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பலர் ஆஸ்பத்திரி விறாந்தைகளிலும் படுத்திருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஓ-117)


## சாவகச்சேரி நகரசபை
## வரவு செலவுத் திட்டம் - 1994

(255 ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 1979 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 178(3) ஆம் பிரிவின் பிரகாரம் இச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்ட 1994 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் இச்சபையில் 14. 12. 1993 ஆம் திகதி தொடக்கம் ஏழு (7) நாட்களுக்கு அலுவலக நேரங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

த. நவரத்தினராச
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி. 10-12-93.

(சி/6706)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி







| செல்வி | செல்வன் | செல்வன் |
|---|---|---|
| **கீதா இராசசுந்தரம்** | **இராசசுந்தரம் பசோதரன்** | **இராசசுந்தரம் சிவகரன்** |
| மலர்வு: 26 12 -1969 | மலர்வு: 22—04—1973 | மலர்வு: 05—11—1976 |

உதிர்வு: **26 — 11 — 1992**
திதி: **14 — 12 — 1993**

எமதன்புத் தெய்வங்களே!
எங்கள் ஆருயிர்ச் செல்வங்களே — உங்களைக்
காத்திருந்தோம் வழி பார்த்திருந்தோம்
உயிருடன் காணவே முடியவில்லை

விமானத்தில் வந்த குண்டுகள்
உங்கள் வாழ்க்கையை முடித்தனவே - எங்கள்
வாழ்நாள் உள்ளவரை எம்மை
வாடடியே வதைக்கின்றதே

எங்கள் பிள்ளைகளாயிருந்தீர்
இன்றெமது தெய்வங்களாகி விட்டீர் - எங்கள்
கண்ணீரைக் காணிக்கையாய் ஏற்றுக்
கனவினில் காட்சி தாரீர்

ஓராண்டாகி விட்டதே
நீங்களின்றி ஒரு யுகம் போலானதே - உங்கள்
ஆத்மா சாந்தியடைய நாம்
அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதரன - இரவி,
உறவினர், நண்பர்கள்.

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(28426)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 19 — 8 — 1913



மறைவு: 25 — 12 — 1992

## அமரர் கபிலிரபம் பழனிச்சாமி

(முன்னைநாள் நெசவு மேற்பார்வையாளர், வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான அறங்காவலர்)

திதி: 14-12-1993

கள்ளமில்லா உள்ளம் கனிந்தநகைச் சிரிப்பு
வெள்ளைநிறத் தோற்றம் விபூதிநிறை நெற்றி
செய்யும்தொழில் அனைத்தும் சீர்தூக்கிப் பார்த்து
செம்மைமிகு நெசவைத் தேர்ந்திட்ட சிறப்பு
சீர்மேவும் யாழ்நகரில் திருமால் அரங்கனுக்கு
பார்போற்றும் கோபுரம் படைத்த மாதொண்டு
பண்பாளர் பழனிஐயா வைகுந்தப் பேறடைந்த
நன்னாளைக் கொண்டாடி நாரணன் தாள்-
தொழுவோம்

மனைவி பிள்ளைகள்,
மருமக்கள், உற்றார், உறவினர்.

(28415)



# நன்றி நவிலல்

## அமரர் L. றேமன் முத்தையா

(இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகாப் பொறியியலாளரும், சர்வதேச லியோ கழகங்களின் மாவட்டத் தலைவரும்)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 03 - 12 - 1925 | 03 - 12 - 1993 |

அன்பு நிறைந்த, அருமை மிகுந்த எமது தலைவர், தந்தை அமரர் L றேமன் முத்தையா அவர்கள் 03 — 12 — 1993 இல் திடீரென இறைபதமெய்தி எம்மையெல்லாம் பேரதிர்ச்சியிலும், மனவேதனையிலும் ஆழ்த்தியிருந்தவேளை, அன்னாரின் இறுதிக் கிரியைகளில் நேரில் மலர் வளையங்களும், மலர் மாலைகளும் அணிவித்தும், இரங்கல் உரைகள் ஆற்றியும் கலந்துகொண்ட உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், அனைத்து லயன்ஸ், லியோ, வை எம் சி.ஏ. கழகத்தினர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்புச் செயற்குழுவினர்கள், மற்றும் ஸ்தாபனத்தினர்களுக்கும், இறுதிச்சடங்குக் திருப்பலிப் பூசையில் பங்குகொண்ட அனைத்துக் குருக்கள், கன்னியாஸ்திரிகளுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நாளை புதன்கிழமை (15 - 12 - 1993) காலை 10.00 மணிக்கு புனித யுவானியார் தேவாலயத்தில் நடைபெறவிருக்கும் இரங்கற் திருப்பலிப் பூசையிலும் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

67/1, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(28431)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## தமிழர்களின் பலம் பெருகட்டும்

பருவமழை முடிந்த கையோடு இராணுவத்தினர் வடக்கில் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்துவர் என்று கொழும்பில் இராணுவ நிபுணர்கள் பலர் நம்புவதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

பூநகரியில் புலிகள் நடத்திய வெற்றித் தாக்குதலுக்கு முன்னர், இந்த வருட இறுதியிலேயே மிகப் பெரிய அளவிலான இராணுவ நடவடிக்கையை நடத்துவதற்கு சிஙல் திட்டமிட்டிருந்தார். அடுத்தடுத்து வந்த கிளாலி, பூநகரித் தோல்விகளால் அது தடுக்கப்பட்டுவிட்டது.

இந்தத் தோல்விகளுக்கு மத்தியிலும் வடக்கில்—குறிப்பாக யாழ்ப்பாணத்தில்—பெரும் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்குப் படையினர் ஆயத்தமாகுவர் என்பது எதிர்பார்க்கப்பட்டதே. இராணுவத் தீர்வை நாடி நிற்கும் அரசு எத்தனை தோல்விகளின் மத்தியிலும் விடுதலைப் புலிகளின் தற்போதைய இராணுவ ரீதியான மேலோங்கிய நிலையை முறியடிக்கவே முனைப்புடன் செயற்படும்.

இதனை விடுதலைப் புலிகளும் எதிர்பார்க்காமல் இல்லை. யாழ். மாவட்டச் சிறப்புத் தளபதி திரு. செல்வராஜா யாழ்ப்பாணத்தில் நடந்த வெற்றிவிழாக் கூட்டத்தில் அதனைத் தெளிவுபடத் தெரிவித்துள்ளார்.

பூநகரித் தோல்வியின் பின்னர், எதிரி இன்னொரு படையெடுப்பை எம்மீது நடத்தமாட்டான் என்று நாம் நினைப்போமானால் நாம் பேரழிவையே சந்திக்க வேண்டிவரும். எப்படியாவது குடாநாட்டைக் கைப்பற்றி மக்களை அழித்துவிடவேண்டும் என்ற முனைப்புடனேயே சிங்கள இராணுவமும், அரசும் உள்ளன— என்று அவர் கூறியிருக்கிறார்.

இதுவே யதார்த்தம். எங்களில் பலர் அதனை இன்னும் முற்றாக உணர்ந்ததாகத் தெரியவில்லை. கடந்த மூன்றரை வருடங்கள் போலவே யுத்தம் தொடரும் என்று பலரும் நினைக்கிறார்களே அன்றி, அரசாங்கம் தமிழருக்குப் பேரழிவை ஏற்படுத்தி யாழ்ப்பாணத்தைப் பிடிக்க முனைகிறது என்பதனைப் புரிந்து கொள்ளவில்லை. புரிந்து கொண்டவர்கள் கூட பேரழிவைத் தடுப்பது எவ்வாறு என்பதனைச் சிந்திப்பதாக இல்லை. அதற்கு மாறாக ஆபத்தை நினைத்துப் பதற்றமுறுபவர்களாகவே இருக்கிறார்கள்.

இப்போது ஈழத்தமிழர்களின் பாதுகாப்பு என்பது இராணுவ பலம் தான். சிங்கள அரசாங்கங்களின் தொடர்ச்சியான அடக்குமுறைகள் அட்டூழியங்களால் நாம் விரும்பியோ விரும்பாமலோ அப்படி ஒரு நிலை உருவாகியிருக்கிறது. அதனை ஆராய்ந்து அல்லது விமர்சித்து இப்போது எதுவும் ஆகப் போவதில்லை. அந்த நிலைமை மாறப்போவதும் இல்லை. சிங்கள அரசு இராணுவத் தீர்வுதான் என்று விடாப்பிடியாக நிற்கும் வரை அது மாறமாட்டாது.

மேலும் —

அடுத்தடுத்துக் கிடைத்த பல வெற்றிகளால் இராணுவ ரீதியில் பலத்தில் மேலோங்கி நிற்கும் தமிழர்கள் அந்த நிலையில் இருந்து பின்னடைந்து போகாமல் அதனைப் பேண வேண்டும். தமிழர்கள் இதுவரை கட்டி எழுப்பிய இராணுவ பலத்தை தேய்ந்து போகாமல் காப்பதே இன்றைய முதற் தேவை. மேலும் விடுதலைப் புலிகள் இயக்க மூத்த உறுப்பினர் திரு. பொட்டு அம்மான் கூறியது போல, தமிழர்களின் பாதுகாப்பு இன்று அவர்களின் இராணுவ வலிமையிலேயே தங்கி உள்ளது. அந்த வலிமையை மேலும் உரமூட்டி வளர்ப்பதிலேயே தமிழ் மக்களின் வாழ்வே தங்கியுள்ளது.

இதனை ஒவ்வொரு தமிழரும் நன்குணர்ந்து இன்றைய போராட்டத்தில் தமது பங்களிப்பைச் செலுத்துவது அவசியம். குடாநாட்டின் மீதான படையெடுப்பை எதிர்கொள்ள தங்களது சகல வளங்களையும் திரட்டி இராணுவ பலத்தைப் பெருக்க வேண்டும். ஸ்ரீலங்கா அரசு போர் முரசம் கொட்டும் போது, தமிழர் மண்ணிலும் போர் முரசம் கொட்டி அணி திரளவேண்டும்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி

# இஸ்ரேல் படைகளின் வாபஸ் நேற்று ஆரம்பமாகவில்லை

### இன்னும் பத்துத்தினங்களில் மீண்டும் பேச்சு

கெய்ரோ, டிச. 14

கடந்த செப்டெம்பரில் வாஷிங்டனில் கைச்சாத்திடப்பட்ட இஸ்ரேல் - பலஸ்தீன விடுதலை இயக்கம் ஆகியவற்றுக்கு இடையேயான சமாதான உடன்படிக்கைக்கு இணங்க, கைப்பற்றப்பட்ட காஸா மற்றும் ஜெரிக்கோ அரபுப் பிரதேசங்களில் இருந்து இஸ்ரேலிய படைகள் வாபஸாகுவது நேற்று ஆரம்பமாகவில்லை.

ஒப்பந்தப்படி இஸ்ரேல் படை நேற்று முதல் வாபஸ் வாங்குவதாக இருந்தது.

படை விலக்கல் தொடர்பாக இஸ்ரேல் பிரதமர் ரபினுக்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத்துக்கும் இடையே எகிப்து தலைநகர் கெய்ரோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுக்களில் படை விலக்கல் விஷயம் குறித்து முன்னேற்றம் காணப்படவில்லை.

எனினும் இருவரும் பத்துத் தினங்கள் கழித்து மீண்டும் கூடிப்பேசுவது என்று தீர்மானித்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

படை விலக்கல் பத்துத் தினங்கள் கழித்து ஆரம்பமாகக் கூடிய வாய்ப்பு உண்டு என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக — சமாதான உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளபடி, கைப்பற்றப்பட்ட அரபுப் பகுதிகளில் வரையறுக்கப்பட்ட பலஸ்தீன சுயாட்சி நிர்வாகம் ஏற்படுவது தாமதமாகும் என்றும் பி.பி.ஸி. தெரிவித்தது.

அண்டவெளியில் அமெரிக்கா மீண்டும் சாதனை:

# விண்வெளியில் 11 தினங்கள்வரை வலம் வந்த 6 பேரும் திரும்பினர்

### பழுதடைந்த தொலைநோக்கி வெற்றிகரமாக இயங்குகிறது

வாஷிங்டன், டிச. 14

பிரபஞ்சத்தின் மர்மத்தைக் கண்டறியும் நோக்குடன் அண்ட வெளியில் வலம்வந்து கொண்டிருக்கும் ஹபிள் விண்கலத்தில் உள்ள பழுதடைந்த தொலைநோக்கியைத் திருத்துவதற்கு 'என்டெவர்' விண்கலத்தில் வானவெளிக்கு அனுப்பப்பட்ட ஒரு பெண் உட்பட ஆறு விண்வெளி வீரர்கள் தங்கள் பயணத்தை முடித்துக்கொண்டு பூமிக்கு சுகமாகத் திரும்பினார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

பதினொரு தினங்கள் விண்வெளியில் வலம்வந்த இவர்கள் ஐந்து தடவைகள் விண்வெளியில் நடந்து சென்று ஹபிள் விண்கலத்தில் உள்ள பழுதடைந்த தொலைநோக்கியைத் திருத்தினார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

வெற்றிகரமாகத் தங்கள் பணியை நிறைவேற்றிய விண்வெளி வீரர்களுடன் 'என்டெவர்' விண்கலம் அமெரிக்காவின் கேப் கென்னடி விண் தளத்தை நேற்று முன்தினம் வந்தடைந்தது.

'என்டெவர்' பயணத்தின் வெற்றி அமெரிக்க விண்வெளித் திட்டத்தின் பெருமையை மேலும் உயர்த்தி உள்ளது என்று பி.பி.ஸி. தெரிவித்தது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி ஸ்தாபனம் 'நாஸா' தனது வரலாற்றில் மேற்கொண்ட மிகச் செலவு மிக்கதும், துணிச்சலும், சிக்கலானதுமான விண்வெளி பயணமாக 'என்டெவர்' பயணம் அமைந்தது. (ஒ-எ)

புதிய அரசமைப்பின் கீழ்

# யெல்ட்சினுக்கு அதிகாரம்; ஆதரவாக வாக்களிப்பு

மாஸ்கோ, டிச. 14

ஜனாதிபதி யெல்ட்சினுக்கு பூரண அதிகாரத்தை வழங்கும் புதிய அரசமைப்புக்கு ஆதரவாக ரஷ்ய மக்கள் வாக்களித்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தை மேலாதிக்கம் செய்யக் கூடிய அதிகாரங்களை புதிய அரசமைப்பின் கீழ் ஜனாதிபதி பெறுகிறார்.

இது தொடர்பாக கடந்த ஞாயிறு நடந்த சர்வசன வாக்கெடுப்பில் 55சதவீதமான வாக்காளர்கள் வாக்களித்தனர். அவர்களில் 60 சதவீதமானோர் புதிய அரசமைப்புக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதேவேளை – சர்வசன வாக்கெடுப்புடன் ஒரேசமயத்தில் நடத்தப்பட்ட நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் எதிர்பார்க்கப்பட்டபடி சீர்திருத்தக் கட்சி வெற்றியீட்டவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

புதிய நாடாளுமன்றத்தில் தீவிரவாத தேசிய தாராள ஜனநாயகக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் பலமான எதிர்க்கட்சியாக அமையும் என்றும்—

அது ஜனாதிபதி யெல்ட்சினுக்கு ஆதரவான குழுக்களுக்குச் சவாலாக அமையும் என்றும் பூர்வாங்க தேர்தல் முடிவுகள் கோடிகாட்டுவதாக அமைந்துள்ளன.

—இவ்வாறு பி. பி. ஸி. தெரிவித்தது. (ஒ-எ)

# மத்திய மாகாண சபையில் இரகசியப் பொலீஸார்!

### இ. தொ. காவினரை கண்காணிக்க?

தற்சமயம் பெரும் பிரச்சினைக்குள்ளாகியுள்ள மத்திய மாகாண சபையில் இரகசியப் பொலீஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மத்திய மாகாண சபை முதல்வருக்கு எதிராக எதிர்க் கட்சிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்துள்ளமையும் —

அந்த பிரேரணையை ஆதரிக்கப் போவதாக அச்சபையில் அங்கம் வகிக்கும் இ. தொ. காவின் 11 உறுப்பினர்கள் தெரிவித்திருப்பதும் — அங்கு பெரும் பிரச்சினையை உருவாக்கியுள்ளது.

தற்சமயம் சபையில் நடக்கும் வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் இ. தொ. கா. உறுப்பினர்களின் நடவடிக்கைகளை வேவு பார்க்கும் வகையிலேயே இரகசியப் பொலீஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திசநாயக்கா குற்றம் சாட்டியுள்ளார்.

மாகாண சபையினதும், சபை உறுப்பினர்களினதும் பாதுகாப்பு கருதியே இரகசியப் பொலீஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக சபைத் தலைவர் சரத் கோன்காகே தெரிவித்துள்ளார். (த-3)

## 'ஞானரதம்' வெளியீடு

கோப்பாய் பிரதேச தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நிலைய பயிற்சி ஆசிரியர்களின் ''ஞானரதம்'' கையெழுத்து சஞ்சிகை வெளியிடப்பட்டுள்ளது.

சஞ்சிகையின் வெளியீட்டு விழா புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. (ஒ-11)

வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு

# கிராம சேவையாளர் பதவி: அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, டிச. 14

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு கிராம சேவையாளர்களை கூடியவிரைவில் நியமிப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபை அமைச்சர் ஜோன் அமரதுங்க கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் உரை ஆற்றுகையில் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கில் ஏனைய பகுதிகளைப் போன்று கிராம சேவையாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. தேசிய பாதுகாப்பு அறிக்கைகளைப் பெறுவதில் தாமதம் நிலவியதாலேயே உரிய காலத்தில் இந்த நியமனங்களை வழங்க முடியாமல் போயிற்று.

இருப்பினும் இந்த நியமனங்களைக்கூடிய விரைவில் வழங்க அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுள்ளேன் —என்றார் அவர். [ஒ-க]

# ஆசிரியர்களின் வீதம் இலங்கையில்தான் அதிகம்

கொழும்பு, டிச. 14

உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையிலும் ஆசிரியர்களின் வீதம் அதிகமாகவே உள்ளது. 23 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற வீதம் இந்த நாட்டில்தான் உள்ளது. இங்கு சிறந்த ஆசிரியர்கள் உள்ளனர். கடந்த நான்கு வருடங்களில் மட்டும் 90 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

கல்விச் சேவைகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜோர்ஜ் மென்டிஸ் இவ்வாறு கூறியுள்ளார்.

காலியில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:

இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் கூட இது போன்ற ஆசிரியர் எண்ணிக்கை இல்லை. எமது நாட்டில் ஆசிரியர்கள் கூடுதலான விடுமுறையை எடுக்கின்றனர். இது பெரும் பிரச்சினையாக [illegible] என்றார். (ஒ-17)

# கசிப்பு விற்பனை செய்த நால்வருக்கு அபராதம்

### 1 லட்சத்து 60ஆயிரம் ரூபா தண்டம்

வலிகாமம்தெற்கு, டிச. 14

தமிழீழத்தில் தடைசெய்யப்பட்ட கசிப்பை சட்ட விரோதமாக உற்பத்தி செய்தமை, விற்பனை செய்தமை, அனுமதிப்பத்திரமின்றி, சாராயம் வைத்திருந்து விற்றமை போன்ற குற்றச்செயல்கள் புரிந்த நால்வருக்கு சுன்னாகம் மாவட்ட நீதியாளர் செல்வி எழில்மதி ஒருலட்சத்து ஆறுபத்தையாயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

விசாரணைகள் நீதியாளர்கள் செல்வி எழில்மதி, க. தேசிகன், ஞா. அறிவொளி ஆகியோர் முன்னிலையில் ஆரம்பமாகின:

சட்டத்துக்கு விரோதமாக கசிப்பை உற்பத்தி செய்தமைக்காகவும், விற்பனை செய்தமைக்காகவும் மயிலங்காட்டைச் சேர்ந்த பசுபதி இரத்தினம் என்பவருக்கு 75 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மேற்படி நபர் முன்பும் இதே குற்றத்துக்காக 15,000 ரூபா அபராதம் செலுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது தடவையாக இவர் கைது செய்யப்பட்ட சமயம் 210 லீற்றர் பரலில் 150 லீற்றர் கசிப்புக் காய்ச்சுவதற்குரிய கோடாவையும், [illegible] தாக குற்றஞ்சாட்டப்பட்டது. [illegible] இருந்த ஏழாலை மத்தியைச் சேர்ந்த சுப்பு கனகரத்தினம் என்பவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சங்குவேலி வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த திருமதி நா. பிறேமாவதி, சட்ட விரோதமாக நாலரை போத்தல் கசிப்பை விற்பனை செய்தமைக்கு 20 ஆயிரம் ரூபாவும்—

ஏழாலைதெற்கு மயிலங்காட்டைச் சேர்ந்த திருமதி சீவரத்தினம் பரிமளம் ஏழே கால் போத்தல் கசிப்பு விற்றமைக்காக 30 ஆயிரம் ரூபாவும்—

அனுமதிப்பத்திரம் பெறாது ஏழு போத்தல் சீல் சாராயம் வைத்திருந்தமை, விற்பனை செய்தமைக்காக பனிப்புலம் பண்டத்தரிப்பு வாசியான திருமதி சிவானந்தம் கமலாதேவிக்கு 10 ஆயிரம் ரூபாவும், வெவ்வேறு இடங்களில் சிறிய அளவில் சாராயம் விற்பனை செய்த மூவருக்கு தலா 1,500 ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது.

குற்றவாளிகள் சகலரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டனர். சுன்னாகம், சங்கானை காவல்துறை பொறுப்பாளர்கள் வழக்கு நெறிப்படுத்தினர்.

கைப்பற்றப்பட்ட கசிப்பு, சாராயம் மற்றும் உற்பத்திக்கான உபகரணங்களை அழித்து விடுமாறு நீதியாளர் பணிப்புரை விடுத்தார். (ஒ-152)

# பூநகரியில் 'நாம் பெற்ற வெற்றி கண்டு அரசாங்கம் திணறுகிறது

### மட்டுவில் வெற்றிவிழா கூட்டத்தில் புதுவை உரை

சாவகச்சேரி, டிச. 14

பூநகரியில் நாம் பெற்ற வெற்றி சிங்கள அரசையும் சிங்கள இராணுவத்தையும் திணற வைத்துள்ளது. விமானத் தளங்களில் யுத்த விமானங்களைக் கூடத் தரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை கடந்த 11ஆம் திகதி மட்டுவிலில் நடைபெற்ற பூநகரி வெற்றிவிழா நிகழ்ச்சியில் உரை நிகழ்த்திய போது இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் —

கத்தரிக்கோல் போல ஒரு பகுதிக் கத்தி ஆனையிறவாகவும் மற்றைய பகுதிக் கத்தி நாகதேவன் துறையாகவும் இருந்தது. இப்போது இக்கத்தரிக்கோலின் ஒரு கத்தியாகிய நாகதேவன் துறை முறிந்து விட்டது.

புலிகளின் வெற்றியை சிங்கள மக்கள் புரிந்து விட்டார்கள். ஏன் சிங்கள பத்திரிகைகள் கூட புரிந்து கொண்டு விட்டன.

எமது மக்களும் இந்த வெற்றியைப் புரிந்து கொள்ள வேண்டும் — என்றார்.

நாம் பெற்ற கருவிகளைப் பயன்படுத்துவதற்கு எமக்கு ஆட்பலம் போதாது. எனவே எமக்கு போராட்ட வீரர்கள் தேவை. இவ்வெற்றியை அனுபவிக்கப் போவது உங்கள் பேரப்பிள்ளைகள். இது அடுத்த தலை முறைக்கான யுத்தம் என்றும் அவர் கூறினார்.

இக்கூட்டத்தில் மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி சந்திரிக்கா, மூத்த தளபதி கருணா உட்பட பலர் உரையாற்றினர். இவ்விழா சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் சொற்கோ தலைமையில் நடைபெற்றது. (ஒ-5)

# கிளாலிக்கு முதலாவது பஸ் மு.ப. 9.30 க்குப் புறப்படும்

யாழ்ப்பாணம், டிச. 14

யாழ்ப்பாணம் - கிளாலி பஸ் சேவை இன்று தொடக்கம் முற்பகல் 9-30 மணிக்கு ஆரம்பமாகும் என்று யாழ். மாவட்ட சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் இணைய வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். பஸ் நிலையத்தில் இருந்து கிளாலிக்கான முதலாவது பஸ் முற்பகல் 9-30 மணிக்குப் புறப்படும். அதனைத் தொடர்ந்து பிற்பகல் 3-30 மணிவரை கிளாலி பஸ் சேவை தொடர்ந்து நடைபெறும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து பெய்த மழை கருதி இரண்டொரு தினங்கள் மட்டுமே முதலாவது பஸ் நண்பகல் 12 மணிக்குப் புறப்பட்டதாகவும் இன்று தொடக்கம் மு. ப. 9 - 30 மணிக்கு பஸ் சேவை ஆரம்பமாகி விடும் என்றும் அதே வட்டாரங்கள் கூறின.

'' கிளாலி பஸ் சேவை நேரத்தில் மாற்றம்'' என்ற தலைப்பில் நேற்று உதயனில் வெளியான செய்தி குறித்துத் தகவல் தெரிவிக்கையிலேயே இவ் விவரங்கள் கூறப்பட்டன. (அ)

## ஆசிரியர்கள் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், டிச. 14

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய்க்கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் ஆண்டு 4, 5இல் கற்பிக்கும் ஆசிரியர்களை நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9மணிக்கு முறையே மருதனார் மடம் யூனியன் கல்லூரிக்கும், மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும் தவறாது சமுகம் தருமாறு கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் அறிவித்துள்ளார். (ஒ)

★ ★ ★

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த முதன்மை ஆசிரியர்கள் அனைவரையும் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்குக் கோட்டக் கல்வி அலுவலகத்துக்குச் சமுகம் தருமாறு கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ)

# யாழ் மாநகரசபையின் வீதி விளக்குத் திட்டத்திற்கு 5 லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், டிச. 14

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் வீதி விளக்குகளை அமைப்பதற்கு புனர்வாழ்வு அமைச்சு ஐந்து லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது

இதில் 3லட்சம் ரூபா நிதியை முதற்கட்டமாக புனர்வாழ்வு அமைச்சு யாழ். மாநகர சபைக்கு அனுப்பி வைத்திருப்பதாக மாநகர ஆணையாளர் பொ. பாலசிங்கம் நேற்றுத் தெரிவித்தார்.

இந்நிதியைக் கொண்டு மாநகர சபையின் வீதி விளக்குத் திட்டத்தை மேலும் விஸ்தரிக்க தாம் நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் —

மேலும் பல வீதிகளில் விளக்குகளை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் சொன்னார். (ஒ-17-162)

## பனை விதை நடுகை

யாழ்ப்பாணம், டிச. 14

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை, தென்னைவள அபிவிருத்திப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் பனை நடுகைத் திட்டத்தின் கீழ் சங்கானை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் இவ்வருடம் 2000 பனை விதைகளை நட்டுள்ளனர். சங்கானை, வட்டுக்கோட்டை, சுழிபுரம் ஆகிய இடங்களில் இவ்விதைகள் நாட்டப்பட்டுள்ளன (ஒ)

# தும்புத் தொழிலை ஊக்குவிக்க பொருண்மிய நிறுவனம் நடவடிக்கை

### நுணாவிலில் 10 குடும்பங்கள் தெரிவு

யாழ்ப்பாணம், டிச. 14

ஒவ்வொரு கிராமங்கள் தோறும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைத் தெரிவு செய்து கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தினூடாக பல்வேறு உதவிகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வழங்கி வருகின்றது.

இதன் அடிப்படையில் தும்புத் தொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் நுணாவில் மத்தி கிராமத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 10 குடும்பங்களைத் தெரிவு செய்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அப்பகுதி கிராமிய உற்பத்திக் குழுவினர் தலா 4,750/-ரூபா வீதம் வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ)

## தென்மராட்சியில் குணாவின்படங்கள்

பூநகரி நாகதேவன்துறை கூட்டுப்படைத் தளம் தகர்ப்பின் போது வீரச்சாவடைந்த தென்மராட்சி சிறப்புத் தளபதி குணாவின் உருவப்படம் தென்மராட்சியின் பல இடங்களில் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

# கொழும்புத் துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கும் தார்

### விரைவில் இங்கு வந்து சேரும்

யாழ்ப்பாணம், டிச 14

யாழ். மாநகரசபைக்கென ஒதுக்கப்பட்ட தார் பரல்கள் கொழும்புத்துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதாக அறிய வருகிறது.

கடந்த வாரம் மார்கோ கப்பலில் தார் பரல்களை ஏற்றுவதற்கு முயற்சி செய்யப்பட்டபோதும், படையினரின் சோதனை நடவடிக்கையினால் அது கைகூடவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தார் பரல்கள் இங்கு வந்து சேராததால், யாழ். மாநகர சபையின் வீதித் திருத்த வேலைகள் பாதிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. (ஒ-17)

# இன்றைய எமது கல்வி வீழ்ச்சிக்கு கல்வியாளர்களே காரணம்

### முன்னாள் கல்விப் பணிப்பாளர் உரை

யாழ்ப்பாணம், டிச. 14

''இன்று நாம் பல்கலைக்கழக அனுமதியில் தகுதி அனுமதியை இரவல் கேட்டுப் பெறும் நிலைக்கு வந்துவிட்டோம் எமது இன்றைய கல்வி வீழ்ச்சிக்கு காரணம் கல்வியாளர்களே. பாடசாலைக்கு தினமும் போய் வந்தால் போதும் என்ற நிலையில் ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். இது பாதகமானது

யாழ். பிரதேச முன்னாள் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இவ்வாறு கூறினார்.

இணுவில் இந்துக் கல்லூரி பெயர் சூட்டு விழா — பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. தம்பித்துரை தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

கிராமப் பாடசாலைகளில் இருந்து நகரப் பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்களின் மோகத்தை தகர்க்கும் வகையில் கிராமப் பாடசாலைகளுக்கு வசதிகள் கூடுதலாக வழங்கப்படுகின்றன. கிராமப்புறப் பாடசாலைகளில் ஆசிரியர்களும் கிராம மக்களும் இந்தப் பட்டினப் பாடசாலை மோகத்தைத் தடுக்க வேண்டும்.

நகரப் பாடசாலை ஆசிரியர்கள் ஊட்டும் புதிய கருத்துக்களை கிராமப் பாடசாலை ஆசிரியர்களும் ஊட்ட வேண்டும். நகரப் பாடசாலைகளை மாணவர் நாடநாட கிராமப் பாடசாலைகளுக்கு மூடுவிழா நடப்பதுடன் ஆசிரியர்களும் வேலையின்றி இருக்கும் அபாய நிலை இன்று காணப்படுகிறது. இதை ஆசிரியர் சமூகம் உணர வேண்டும்.

நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் உட்பட பலர் விழாவில் உரையாற்றினார்கள். (க-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிச. 14

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் கால் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டரங்கில் நடைபெறும்.

இன்றைய ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

★ அளவெட்டி விநாயகர் வி.க அணி எதிர் மானிப்பாய் சில்வர் ஸ்ரார் வி.க அணி

★ ★ ★

யாழ். மிட்ரவுண் றோட்டரக்ட் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் மோதும் அணிகள் வருமாறு

★ பாடுமீன் வி.க அணி எதிர் சென் நீக்கிலஸ் வி.க அணி

★ சென் மேரிஸ் வி.க அணி எதிர் சென். அன்ரனிஸ் வி.க. அணி. (த)

# பொய்த்தகவல் வெளியிடும் பத்திரிகைகள் மீது நடவடிக்கை

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, டிச. 14

பொய்த் தகவல்களை வெளியிடும் பிரசுரங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

பொய்யான தகவல்களை வெளியிடும் புதினத்தாள்கள், துர்நோக்கப் பிரசுரங்கள், பாலியல் பற்றிய வெளியீடுகள் ஆகியவற்றுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸ் மா அதிபர் ஏற்பாடுகள் செய்து வருகிறார் என தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்ட அறிவித்தல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நபர்களுக்கு அபகீர்த்தி மற்றும் மாசு கற்பிக்கும் வகையில் வெளியிடப்படும் பிரசுரங்களுக்கு எதிராகவும் பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை எடுப்பார் என்றும் அவ்வறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகைச் சபைச் சட்டத்தின் 15 ஆவது பிரிவின் கீழ் எடுக்கப்படவுள்ள இந்த நடவடிக்கையின் கீழ் குற்றஞ் செய்யும் ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத அபராதம் அல்லது இரு வருடங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது இவ்விரு தண்டனைகளும் விதிக்கப்படலாம் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுதந்திரக்கட்சி எதிர்க்காது

பொய்த்தகவல்களை துர்நோக்கங்களுடன் வெளியிடும் பிரசுரங்களுக்கு எதிராக அரச நடவடிக்கை எடுப்பது குறித்து சுதந்திரக் கட்சி எதிர்ப்புத் தெரிவிக்காது என்று அக்கட்சியின் எம்.பிக்களில் ஒருவரான எஸ்.பி. திஸநாயக்கா தெரிவித்தார்.

எனினும் இதனைப் பயன்படுத்திக் கொண்டு பத்திரிகைகளுக்கும் பத்திரிகைகளின் விநியோகத்துக்கும் இடுக்கண் விளைவிப்பதற்கு அரசு முயலுமாயின் தொடர்பு சாதன சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்காக பாரிய போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு தமது கட்சி நிர்ப்பந்திக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கபடத்தனமாகப் பொலீஸாரைப் பயன்படுத்தி, பத்திரிகைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு தயாராவது எதிர்வரும் ஆண்டில் நடைபெறவுள்ள தேர்தல்களில் எதிர்க் கட்சிகளின் பிரசாரப் பணிகளுக்குக் குந்தகம் விளைவிப்பதற்கே ஆகும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-6)

## மக்கள் வங்கி வெற்றிடம் 23 விண்ணப்பித்தோர் 6 ஆயிரம்

யாழ்ப்பாணம், டிச. 14

யாழ். மாவட்ட மக்கள் வங்கிக் கிளைகளில் உள்ள 23 வெற்றிடங்களுக்கு 6 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் உள்ள எழுதுவினைஞர், தட்டெழுத்தாளர் பதவிகளுக்காக பரீட்சை திணைக்களத்தால் நடத்தப்படவுள்ள போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 20 ஆம் திகதி ஆகும்.

இப் போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்காக நேற்று வரை சுமார் 6 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை — இப்போட்டிப் பரீட்சையில் தமிழ் மொழி தேர்ச்சியும் பிறவும் (1½ மணித்தியாலங்கள்), நுண்ணறிவு — எண் தேர்ச்சியும், பொது அறிவும் (1½ மணித்தியாலங்கள்) பாடங்களாக இருக்கும் என யாழ். அரச அதிபர் செயலகத்துக்கு அறிவித்துள்ளார். (இ-3)

## அரசு பெரும் தாக்கு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா இராணுவம் மிகப் பெருந் தோல்விகளை அடுத்தடுத்துச் சந்தித்து வருகிறது. மணலாறு மண்கிண்டிமலையில் சந்தித்த தோல்வியை ஈடுசெய்ய கிளாலியை தடை செய்ய பெரும் தாக்குதலை நடத்தினர். அந்தப் புலோப்பளைச் சமர் விடுதலைப் புலிகளுக்கு ஒருபெரும் வெற்றியை ஈட்டித்தந்தது.

இன்று பூநகரி முகாம் முற்றாகத் தகர்க்கப்பட்டிருக்கிறது. அடுத்தடுத்து இத்தகைய தோல்விகளைச் சந்தித்த இராணுவம் ஒரு புதிய பரிணாமத்தைப்பெற தற்போது முயற்சி செய்து வருகிறது. மனோதிடம் உடைந்த நிலையில் தற்போது இராணுவம் ஒரு புதிய கட்டமைப்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. புதிய இராணுவத் தலைமை உருவாக்கப்பட்டுள்ளது.

அந்தப் புதிய இராணுவத் தலைமையின் கீழ் தமிழ்ப் பிரதேசத்தைக் கைப்பற்றும் திட்டங்களை அமுல் படுத்திக் கொண்டுள்ளனர். சிங்கள இராணுவம் குடாநாட்டில் குவிக்கப்பட்டு வருகிறது. என்றுமில்லாதவாறு விமானங்கள் இங்கு அடிக்கடி பறந்து திரிவதை அவதானித்திருப்பீர்கள்.

கிழக்கில் பல முகாம்கள் அகற்றப்பட்டுள்ளன. அங்குள்ள படையினர் வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

பூநகரியில் சந்தித்த பெரும் தோல்வியை ஈடுசெய்வதற்காக — இராணுவத்தினர் மத்தியிலே ஒரு நம்பிக்கையை மீண்டும் ஏற்படுத்துவதற்காக — ஒரு தற்காலிக இராணுவ வெற்றியையாவது எட்ட வேண்டிய நிலை படையினருக்கு ஏற்பட்டுள்ளது.

அடுத்த கட்ட நடவடிக்கை

அத்தகைய ஒரு பெரும் வெற்றியை ஈட்டிய பின்னர் தான் சிங்கள மக்கள் மத்தியில் சென்று பேசக்கூடிய நிலையில் அரசும் இருக்கிறது. அத்தகைய ஒரு நிலையை ஏற்படுத்துவதற்காக — சிங்கள மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக — இராணுவத்தின் வலிமையை உறுதிப்படுத்துவதற்காக — தமது முழுப் பலத்தையும் பிரயோகித்து, மிகப் பெரும் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள எதிரி திட்டமிட்டு வருகின்றான்.

எனவே நாம் பூநகரியில் ஈட்டிய பெரு வெற்றியின் களிப்பில் மூழ்கிக்கொண்டிருக்காது அடுத்த கட்ட நடவடிக்கைக்கு எம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாய சூழ்நிலையில் நாம் இருக்கிறோம்.

பெரும்பாலும் புத்தாண்டிலே ஒரு மிகப் பெருந் தாக்குதலை நடத்த எதிரி தயாராகி வருகிறான்.

யுத்தத்தை நடத்துவதற்கு அரசுக்கு மேற்குலக நாடுகள் ஆயுதங்களைவழங்கிக் கொண்டுள்ளன. குண்டுவீச்சு விமானங்களையும் அவற்றுக்கான குண்டுகளையும் அந்த நாடுகள் அரசுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றன. அதே சமயத்தில் அந்த மேற்குலக நாடுகளே சமாதானம் பற்றியும் மனித உரிமை பற்றியும் பேசிக் கொண்டிருக்கின்றன.

ஒரு புறம் மக்களை அழிப்பதற்காகக் குண்டுகளை வழங்கிக் கொண்டு, மறுபுறம் மனித உரிமைகளைப் பற்றி அந்த நாடுகள் பேசுகின்றன. ஆகவே இந்த மேற்குலக நாடுகள் ஸ்ரீலங்கா அரசுக்கு உதவி புரியும் வரை இங்கு சமாதானம் ஏற்பட முடியாது. இந்நிலையில் எங்களை நாங்கள் பலப்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை.

இந்த இராணுவ நடவடிக்கையை எதிர்கொள்ள நாம் தயாராகா விட்டால் நிச்சயமாக நாம் அழிவுகளைச் சந்தித்தே ஆகவேண்டும். எனவே புலிகளின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும். புலிகளின் ஆயுதங்களை ஏந்தவேண்டும். எல்லா மக்களும் இந்தப் போராட்டத்திலே இணைந்து விட வேண்டும்.

எனவே இந்த இறுதிப் போரிலே அனைவரும் இணைந்து கொள்ள வேண்டிய கட்டாய சூழ் நிலையில் இருக்கிறோம். — என்றார்.

நேற்றைய கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் பாதிக்கப்பட்ட பெண்கள் புனர்வாழ்வுக்குப் பொறுப்பான செல்வி சுடரவன், கடற்புலிகள் மகளிர் படையணி பொறுப்பாளர் செல்வி நளாயினி, மன்னார் மாவட்டத் தளபதி திரு. கதிர் ஆகியோர் உரையாற்றினர். (அ-5-9-173-109)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை நேசம்மா

வல்லை வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பொன்னுத்துரை நேசம்மா 13-12-1993 திங்கட்கிழமை அதிகாலை சிவபதமடைந்து விட்டார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் திங்கள் பிற்பகல் அவரது இல்லத்தில் நிறைவேற்றப்பட்டன.

இவர் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், நேசதுரை (ஓய்வு பெற்ற உத்தியோகஸ்தர் - அஸ்பெஸ்ரஸ் சிமென்ற் இன்டஸ்ரீஸ் - கொழும்பு மஸ்கன்ஸ்), நேசலிங்கம் (வவா) - ''வேலவன் றான்ஸ் போட்'', இராஜகுலேந்திரன் (கனடா), திருமதி நேசதேவி இராஜதுரை ஆகியோரின் அருமைத் தாயாரும், எஸ் இராஜதுரை (தலைவர் - பயிரியல் துறை, விவசாய பீடம், கிளிநொச்சி, யாழ். பல்கலைக்கழகம்), திருமதி ஜெகதாம்பரலெட்சுமி, குணராணி, தர்மநாயகி (கனடா), புனிதமலர் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற திருமதி மனோன்மணி சங்கரப்பிள்ளை, திருமதி சிவகாமசுந்தரி நாகலிங்கம் (மலேசியா) ஆகியோரின் சகோதரியும், திருமதி அருட்செல்வநாயகி கௌரிதாசன், அருணாசலம் (கனடா), திருமதி வாசுகி இராஜரத்தினம் குகன் (கனடா) ஆகியோரின் பெரிய தாயாரும், மயூரன், ரமணன், வாமினி, சயந்தினி, அகிலன், திவ்யா, ஜீவிதா, நிருஷன், நிஷானி, கௌசி, சேந்தன், அபிராஜினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

தகவல்:
பொ. நேசதுரை (மகன்)

[6849]

### வேலாயுதம் சோமசுந்தரம்

(முன்னாள் போக்குவரத்து சபை சாரதி)

கீரிமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது அளவெட்டியில் வசித்தவருமான வேலாயுதம் சோமசுந்தரம் நேற்று (13-12-93) காலமானார்.

இவர் காலஞ்சென்ற வேலாயுதம் அன்னலட்சுமி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும், புவனேந்திராவின் (வலி. வடக்கு பிரதேச சபை, தெல்லிப்பழை - உப அலுவலகம்) அன்புக் கணவரும், கனகராசா, நல்லம்மா ஆகியோரின் மருமகனும்' அநுஜா, பபிதா, அநுசாந்தன், சுகன்யா, சோபனா ஆகியோரின் அன்புத் தந்தையும், சொர்ணாம்பாள், இராசநாயகி, சிறீஸ்கந்தராசா, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேந்திரன் (அதிபர், அ.த.க. பாடசாலை, இராமநாதபுரம், கிளிநொச்சி), இராஜேந்திரா (லங்கா சிமெந்து), நாகேந்திரா (லங்கா சிமெந்து), ஜேர்மனைச் சேர்ந்த பாலேந்திரா, யோகேந்திரா, விஜயேந்திரா, இரவீந்திரா, சிங்கப்பூரைச் சேர்ந்த சிவனேந்திரா, தவனேந்திரா' கஜேந்திரா (நோர்வே), ஞானேந்திரா, நாசராசா, Dr சிவபாலன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (14-12-93) காலை 10.00 மணியளவில் உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோவில் வீதியிலுள்ள இவரது இல்லத்தில் நடைபெற்று, தகனத்திற்காக பூதவுடல் வேம்பயன் மாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகதல்:
பொ, கனகராசா
முன்னாள் கி. ச. உறுப்பினர்
கீரிமலை.
(கீரிமலை பிள்ளையார்
ஆலய தர்மகர்த்தா)

உரும்பராய்.

(6740)

### சந்தியோகு மரியம்மா

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சந்தியோகு மரியம்மா 13-12-1993 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சந்தியோகுவின் அன்பு மனைவியும், தியாகராசா, ஊர்த்தம்மா, வஸ்தியாம்பிள்ளை (ஜேர்மன்), காலஞ்சென்ற I. P. ஞானப்பிரகாசம், அடைக்கலமுத்து, (பூபதி பேக்கரி உரிமையாளர்), ஞானமுத்து (ஹொலண்ட்), செல்லமணி, அருள்மணி, மனோன்மணி ஆகியோரின் அன்புத் தாயாரும், சவரிமுத்து, பிரான்சிஸ் அம்மா, செல்வராணி, பூபதி, ஜெயராணி, Dr. மத்தியூஸ், பொன்சானுாஸ் (அமல் பேக்கரி உரிமையாளர்), பவளத்துரை ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக இன்று செவ்வாய்க்கிழமை (14-12-1993) பிற்பகல் 3.30 மணியளவில் அடைக்கலநாயகி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.

'மேரி வாசம்',
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(28432)

## போராளி..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டார்.

வீரவேங்கை தம்பித்துரை (நாகேஸ்வரன் ஈஸ்வரன் முல்லைத்தீவு) என்ற போராளியே வீரச்சாவைத் தழுவிக் கொண்டவராவார்.

## இறுதிநாள்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தொடர்ந்து கூட்ட மைதானத்தில் புலிகளின் அணிவகுப்பு, கடற்புலிகளின் அணிவகுப்பு, கரகாட்டம், வெற்றிக்களிப்புக் கோலாட்டம் என்பன நடைபெற்றன.

இதனை அடுத்து வெற்றி விழாக் கூட்டம் ஆரம்பமானது. கூட்ட மைதான சுற்றாடலில் பூநகரி வெற்றியை எடுத்துக் காட்டும் ''கட் அவுட்'' களும் வைக்கப்பட்டிருந்தன.

முன்னதாக வடமராட்சிப் பகுதியிலுள்ள கிராமங்கள், நகரங்கள், பட்டினங்கள் ஆகியவற்றில் இருந்து ஊர்திப் பவனிகள், கரகாட்டம், கோலாட்டம் என்பன பேரணி ஆரம்பமான கிராமக் கோட்டுச் சந்தியை வந்தடைந்தன.

இதனைத் தொடர்ந்து கூட்டம் நடைபெற்ற பருத்தித்துறை பழைய பஸ் நிலையத்தை நோக்கி அணிவகுப்பு, ஊர்திப் பவனிகள் ஆரம்பமாகின.

பருத்தித்துறையில் நடைபெற்ற வெற்றி விழா நிகழ்ச்சியையொட்டி நேற்று பருத்தித்துறை பகுதியில் பருத்தித்துறை வர்த்தக சங்க எல்லைக்கு உட்பட்ட சகல வியாபார நிறுவனங்களும் பிற்பகல் 2 மணியுடன் மூடப்பட்டன.

பொதுக்கூட்டம் முடிவடைந்ததைத் தொடர்ந்து வெற்றித் தீபம் ஏற்றும் நிகழ்ச்சி இடம்பெற்றது. பெரும் எண்ணிக்கையான இளைஞர்களும், யுவதிகளும் சுடர்களைத் தாங்கியவாறு அணியாக கூட்டம் நடைபெற்ற இடத்தை வந்தடைந்தனர். பின்னர் அவர்கள் அங்குஇருந்த பொது தீபத்தை ஏற்றினர்.

பொதுத் தீபம் ஏற்றப்பட்ட நேரம் அங்கு கூடியிருந்த மக்கள் தங்கள் வலது கைகளை உயர்த்தியவாறு வெற்றி எனக் கோஷமிட்டனர்.

வண்ண வெளிச்சக் கூண்டுகள் பலவும் நேற்று அங்கு பறக்கவிடப்பட்டன. வெற்றி நாள் பொதுக் கூட்டத்தை யொட்டி பருத்தித்துறைப் பகுதி எங்கும் அலங்கரிக்கப்பட்டு எழிலுடன் திகழ்ந்தது. (இ-5-9-173)

## கிழக்கில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 29) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்கள் அனைவரும் திருமணமானவர்கள்.

இதேவேளை —

மட்டக்களப்பு வெல்லாவெளியில் நிலைகொண்டுள்ள விசேட அதிரடிப் படையினர் பலாச்சோலை, காக்காச்சிவெட்டை ஆகிய கிராமங்களை சுற்றி வளைத்து இளையதம்பி தர்மன் (வயது 19), காசுபதி பூபாலசிங்கம் (வயது 22), சிங்கம் முருகேசு (வயது 21) ஆகியோரைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர். (த)

## தபால் திணைக்கள ஊழியர் பதவி உயர்வுப் பரீட்சை

### கொழும்பில் பெப்ரவரியில்

தபால் திணைக்களத்தில் பணிபுரியும் ஊழியர்களை பதவி உயர்த்தும் போட்டிப் பரீட்சை ஒன்று எதிர்வரும் பெப்ரவரி நடுப்பகுதியில் கொழும்பில் நடத்தப்படஇருக்கிறது.

ஒருங்கிணைந்த அஞ்சல் சேவையின் தொகுதி 'ஏ' தரம் III பிரிவு 'ஏ' பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக நடத்தப்படும் இப்பரீட்சையில் தபால் சேவையில் உள்ளவர்களே விண்ணப்பிக்க முடியும்.

அதிசிரேஷ்ட தரத்தில் உள்ள தபால் அதிபர்கள், முதலாம் தர தபால் அதிபர்கள், முதலாம் தர லிகிதர்கள், நுண்ணாய்வுப் பரிசோதகர்கள், தபால், கணக்கு பரிசோதகர்கள், 10 வருடம் நிரந்தர சேவை பூர்த்தி செய்த பட்டதாரிகளான தபால் உத்தியோகத்தர்கள் இப்போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

இப்பரீட்சைக்கு தோற்ற விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். தபால் திணைக்களத்துக்கு அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது. (இ-3-162)

## தெல்லிப்பழை வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு இடம் மாற்றப்படும்

சண்டிலிப்பாய், டிச. 14

மானிப்பாய் திருக்குடும்ப கன்னியர் மடத்திலுள்ள தியான இல்ல கட்டடத்தில் கடந்த ஒன்றரை வருட காலமாக இயங்கி வரும் தெல்லிப்பளை அரசினர் மாவட்ட வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு விரைவில் வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது

1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் வலி மேற்கு, வலி தென் மேற்குப் பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது இடம்பெயர்ந்து அகதிகளாக மானிப்பாய் பகுதியிலும் அதன் சுற்றுப்புற கிராமங்களிலும் தஞ்சமடைந்திருக்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு இந்த வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு பெரும் வரப்பிரசாதமாக இருந்து வந்தது.

மேற்படி தியான இல்ல நிர்வாகிகள் இக் கட்டடத்தை தம்மிடம் மீண்டும் ஒப்படைக்குமாறு தெல்லிப்பளை மாவட்ட வைத்திய அதிகாரிக்கு எழுத்து மூலம் அறிவித்ததை அடுத்தே வேறுபொருத்தமான ஒரு கட்டடத்துக்கு இந்த சிகிச்சை நிலையத்தை இடமாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆனால் இப்பகுதியில் இதற்கான கட்டடம் அல்லது வீடு ஒன்றை பெறுவது மிகவும் கஷ்டமானதாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இப்பகுதியிலுள்ள பொது நல நிறுவனங்கள் இது தொடர்பாக உதவவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ-135)

## களத்தில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பி.பி.சி செய்தியாளர் சியாகோ நூஸ் மேலும் தெரிவித்ததாவது.

''பூநகரி அழிவுக்குப் பின்னர், இலங்கை இராணுவம் தோல்வி அடைந்து வரும் இராணுவம் என்று நாம் கூறியதாக வெளிவந்த செய்தியை சிசில் வைத்தியரத்னா தமது போட்டியில் மறுத்துள்ளார். இம்மறுப்பை பலர் நம்பவில்லை.

''ஜெரி சில்வாவின் பதவி உயர்வுக்கு சிசில் காட்டும் எதிர்ப்பு, இராணுவத் தளபதிகள் மத்தியில் நிலவும் உட்பூசல்களுக்கும் பொறாமைக்கும் இன்னோர் எடுத்துக் காட்டு.

''சிசிலுக்கு வெளிநாட்டுத் தூதர் பதவி கிடைக்கலாம் என்ற நேரத்தில் அவரின் இச் சர்ச்சைக்குரிய கருத்துக்கள் மோசமான தருணத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

''தோல்வியடைந்து வரும் இராணுவம் என்று தாம் கூறவில்லை என்று சிசில் மறுத்திருந்தாலும் இதுபொய்யோ, உண்மையோ இக் கருத்துக்கள் இராணுவ [illegible] இருந்து வரும் [illegible] நல்லவை அல்ல என்பதும் வெளிப்படை. (இ-6)

## பரிசாரகர் பயிற்சி நெறி பின்போடப்பட்டது

யாழ்ப்பாணம், டிச. 14

யாழ். போதனா வைத்திய சாலையில் கடமை புரிந்த சிற்றூழியர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 30 பேருக்கு இம்மாதம் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட இருந்த பரிசாரகர் பயிற்சி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி கிடைக்காததால் பின்போடப்பட்டுள்ளது. (இ-15)

## கைப்பற்றப்பட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை பல ஆலயங்களில் பூநகரி வெற்றியை வாழ்த்தியும், போராளிகளின் நலன் வேண்டியும், மேலும் பல வெற்றிகள் கிடைக்க இறை ஆசி வேண்டியும் விசேட பூசைகள் பிரார்த்தனைகள் நடைபெற்றன.

நாயன்மார்கட்டு வெய்யிலுகந்த விநாயகர் ஆலயத்தில் விசேட பூசையும் பஞ்சமுக அர்ச்சனையும் நடைபெற்றன.

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் சிவன் கோவிலில் அகில இலங்கை திருமறை மன்றத்தின் ஆதரவில் விசேட பூசையும், பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

யாழ். நகரிலும் மற்றும் [illegible] பகுதிகளிலும் வெற்றித் தீப ஊர்வலங்கள் பரவலாக நடைபெற்றன. (அ-15-17-111)

## கார்ட்டுக்கு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விருக்கிறது.

பருத்தித்துறையில் இருந்து மண்ணெண்ணெய் எடுத்து பொதுமக்களுக்கு 2 லீற்றர் வீதம் விநியோகிக்குமாறு ப.நோ.கூ. சங்கங்களை யாழ் செயலக புனர் வாழ்வுப் பிரிவு கேட்டுள்ளது. மார்கோ கப்பல் தற்போது காங்கேசன் துறையில் நிற்கிறது.

## தேசிய..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ப.நோ.கூ.சங்கம், பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கம், சங்கானை தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சங்கம் ஆகியன சேர்ந்தும் வழங்கி இருந்தன. இவை இரண்டையும் மூத்த தளபதி பொட்டு அம்மான் பெற்றுக்கொண்டார். (அ)

## இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம், டிச. 14

யாழ் மாவட்டத்தினுள் இடம்பெயர்ந்து பிறிதொரு பாடசாலையில் தற்காலிகமாகக் கல்வி கற்பிக்கும் சகல ஆசிரியர்களும் அவர்களின் நிரந்தரப் பாடசாலைக்குரிய கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளரை எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சந்திக்கும்படி கல்விப் பணிப்பாளர் (யாழ்ப்பாணம்-1) செல்வி ரி. பெரியதம்பி அறிவித்துள்ளார். (த)

## இன்று

யாழ்ப்பாணம், டிச. 14

ருகுணு கப்பலில் வந்து சேர்ந்துள்ள விதை உருளைக் கிழங்கை விநியோகம் செய்தல் மற்றும் விலை நிர்ணயம் செய்தல் ஆகியவை தொடர்பான கூட்டம் ஒன்று இன்று செவ்வாய் பிற்பகல் 2 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்திற்கு மாவட்ட விவசாய விலை நிர்ணய உபகுழுவின் உறுப்பினர்களை சமுகமளிக்குமாறு மாவட்டப் பிரதி ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (த)

## தலைவரின் மனதில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடற் புலிகள் மீட்டு வந்தனர். அப்போது பல கடற்படையினரின் சடலங்கள் அங்கே மிதந்து கொண்டிருப்பதை அவர்கள் கண்டனர். நாகதேவன்துறை கைவிடப்பட்ட நிலையில் உள்ளது.

பூநகரித் தாக்குதலின் போது மீட்கப்பட்ட படகுகளைக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு சுமார் 500 பேர் வரையான பொதுமக்கள் தமது உயிரைத் துச்சமென மதித்து உதவினர் அவர்களுக்கு கடற் புலிகள் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

புலோப்பளைச் சமரின் பின் 800 பேர் புலிகளுடன் இணைந்தனர். - அவர்களது பலத்தினால் தான் பூநகரியில் எடுத்த ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆயுதங்களை கொண்டுவர முடிந்தது. 10 ஆம் திகதி நீரேரியை கடந்து சென்ற போராளிகள் மூன்று நாட்கள் உணவு, உறக்கம் இன்றி தொடர்ந்து சண்டை செய்து கொண்டிருந்தனர். இந் நிலையால் பயிற்சியிலிருந்தவர்களை பாதிப்பயிற்சியுடன் ஆயுதம் காவி வருவதற்குக் கொண்டு செல்ல வேண்டியிருந்தது. இவ்வளவுக்கு எம்மிடம் போராளிகள் பற்றாக்குறை இருக்கிறது.

ஸ்ரீலங்கா அரசு அடுத்த மாதம் ஒரு பெரிய தாக்குதலுக்கு திட்டம் தீட்டுகிறது. மீண்டும் போர்முரசு ஒலிக்கப் போகிறது.

புலோப்பளைக்கு எப்படி முகம் கொடுத்து அணிதிரண்டீர்களோ அதேபோல் இந்த வெற்றிக்குப் பின்னும் ஒரு அணியாக திரண்டால் எதிரி படை எடுத்தாலோ, அல்லது படை முகாம்களில் இருந்தாலோ அவர்களது முகாம்களை நிர்மூலமாக்கி வெற்றி விழாக்களை அடுத்தடுத்து கொண்டாடிக் கொண்டிருக்கலாம்!

பூநகரி தாக்குதலில் கடற்புலிகளின் மகளிர் அணி பெரும் பங்காற்றியது. அவர்கள் குறுகிய கால பயிற்சி பெற்றிருந்த போதும் 200 குதிரை வலு கொண்ட இயந்திரங்கள் பூட்டிய படகுகளில் சென்று போர் புரிந்து வெற்றி படைத்தார்கள் மீட்ட படகுகளை கொண்டு வந்து சேர்ப்பதிலும் பெரும் பங்காற்றினார்கள்.— என்றார். (அ-9-5-173-109)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14-12-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org